FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS) (Under Section 154 Cr.P.C.)
(பா.குபா.ச பிரிவு 173 இன் கீழ்) (குற்றவிதொ பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C

1. District மாவட்டம் Virudhunagar PS காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year ஆண்டு 2026 FIR No முதல் எண் 05/2026 Date நாள் 21.06.2026

2. (i) Act சட்டம் PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள் u/s 7
(ii) Act சட்டம் Sections பிரிவுகள்
(iii) Act சட்டம் Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 05.06.2026 Date to நாள் வரை 18.06.2026
Time Period நேர அளவு Time from நேரம் முதல் 10.30 hrs Time to நேரம் வரை 11.30 hrs
(b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.06.2026 Time நேரம் 18.00 hrs
(c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21.06.2026 Time நேரம் 18.00 hrs

4. Type of Information Written/ Oral : தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக In typing

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 25 Kms / West
Beat Number முறைக் காவல் எண்
(b) Address : முகவரி கீழதிருத்தங்கலில் அமைந்துள்ள செங்கமலப்பட்டி ஊராட்சிமன்ற அலுவலகத்தில் வைத்து.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காநி பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.ப.ரமேஷ் (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் திரு.பரமசிவம்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 04.08.1986 (d) Nationality நாட்டினம் Indian (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue வழங்கப்பட்ட நாள் Place of Issue வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் வழக்கறிஞர் (g) Address முகவரி 2/1556, விவேகானந்தர் காலனி, பள்ளப்பட்டி ரோடு, சிவகாசி (கிழக்கு) விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.சுப்பிரமணியன், ஊராட்சி செயலர், செங்கமலப்பட்டி ஊராட்சிமன்ற அலுவலகம், சிவகாசி ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- வாதியால் தாமதம் -

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10 Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Not arise

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 21.06.2026 மாலை 18.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், சிவகாசி (கிழக்கு), பள்ளபட்டி ரோடு, விவேகானந்தர் காலனி, கதவு எண்.2/1556, என்கிற முகவரியை சேர்ந்த திரு.பரமசிவம் என்பவரின் மகன் திரு.ப.ரமேஷ் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகாரை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 21.06.2026 மாலை 20.30 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.சுப்பிரமணியன், ஊராட்சி செயலர், செங்கமலப்பட்டி ஊராட்சிமன்ற அலுவலகம், சிவகாசி ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் என்பவர்மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2026 சட்டப்பிரிவு 7 of the Prevention of Corruption Act 1988 as amended in

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

21/06/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. JASMINE MUMTAJ
Rank: நிலை Inspector/வஆஇ/UNR.

விருதுநகர் மாவட்ட ஊ.த.க.பிரிவு குற்ற எண்.05/2026 பிரிவு 7 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.ப.ரமேஷ் அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் ப.ரமேஷ், B.A., B.L., வயது 39/2026, வழக்கறிஞர், த/பெ.பரமசிவம், கதவு எண்.2/1556, விவேகானந்தர் காலனி, பள்ளப்பட்டி ரோடு, சிவகாசி (கிழக்கு), விருதுநகர் மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, விருதுநகர் மாவட்டம். ஐயா, நான் விருதுநகர் மாவட்டம், சிவகாசி (கிழக்கு), பள்ளப்பட்டி ரோடு, விவேகானந்தர் காலனியில் குடும்பத்துடன் குடியிருந்து, வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறேன். சிவகாசி பஞ்சாயத்து யூனியன் செங்கமலப்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட கீழத்திருத்தங்கல் கிராமம் அயன் புஞ்சை சர்வே எண்.1169/1A1B-ல் பிளாட் எண்கள்.56 மற்றும் 57-ல் உள்ள மொத்தம் 2400 சதுரடி காலிமனையை திருத்தங்கல் சார்பதிவாளர் அலுவலக கிரையப்பத்திர ஆவண எண்.402/2026, நாள்.23.01.2026-இன்படி எனது மனைவி திருமதி.நதியா பெயரில் கிரையம் பெற்றிருந்தேன். பின்னர் அந்த இடத்தில் சுமார் 659.289 சதுர அடி அளவில் எனது மனைவி திருமதி.நதியா பெயரில் வணிக வளாக கட்டிடம் ஒன்று கட்டி முடித்தேன். பின்னர் மேற்படி கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி மற்றும் கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்காக உரிமம் பெற்ற பொறியாளர் திரு.வினோத்குமார் மூலம் அதற்குரிய ஆவணங்களை இணைத்து இணையதளத்தில் கடந்த 04.06.2026 அன்று விண்ணப்பம் செய்தேன். அந்த இணையதள விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து, கீழத்திருந்தங்கலில் அமைந்துள்ள செங்கமலப்பட்டி ஊராட்சிமன்ற அலுவலகத்திற்கு மறுநாள் (05.06.2026) காலை சுமார் 10.30 மணியளவில் சென்று, ஊராட்சி செயலர் திரு.சுப்பிரமணியன் என்பவரிடம் கொடுத்து கட்டிட அனுமதி மற்றும் கட்டிட வரைபட அனுமதி வழங்குவது சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர், அந்த இணையதள விண்ணப்பத்தினை பெற்று வைத்துக்கொண்டு, உங்களுக்கு கட்டிட அனுமதி மற்றும் கட்டிட வரைபட அனுமதி கிடைப்பதற்கும், அதன்பின்பு சொத்துவரியை நிர்ணயம் செய்து, கேட்பு அறிவிப்பு கிடைப்பதற்கும் நான்தான் ஏற்பாடு செய்யவேண்டும். எனவே இவை அனைத்திற்கும் ரூ.10,000/- தனியாக கொண்டுவந்து என்னிடம் கொடுங்கள், அனைத்தும் கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் முதல்ல கட்டிட அனுமதி மற்றும் கட்டிட வரைபட அனுமதி கிடைக்க ஏற்பாடு செய்யுங்க, அதன்பின்பு சொத்துவரியை நிர்ணயம் செய்து, கேட்பு அறிவிப்பு கிடைக்க ஏற்பாடு செய்யுறப்ப பார்த்துக்கலாம் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர், கடந்த 15.06.2026 அன்று எனது மனைவி பெயரிலுள்ள கட்டிடத்திற்கு செங்கமலப்பட்டி கிராம பஞ்சாயத்து தனிஅலுவலர் கட்டிட அனுமதி மற்றும் கட்டிட வரைபட அனுமதியை இணையதள வழியாக வழங்கியுள்ளதாக, பொறியாளர் திரு.வினோத்குமார் எனக்கு தகவல் தெரிவித்து, மேற்படி அனுமதிகளை பதிவிறக்கம் செய்து என்னிடம் வழங்கினார்.

அதன்பின்னர், மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரியை நிர்ணயம் செய்து, கேட்பு அறிவிப்பு வழங்கக் கேட்டு, அத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்களை இணைத்து, செங்கமலப்பட்டி ஊராட்சிமன்ற அலுவலகத்திற்கு கடந்த 18.06.2026 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் சென்று, ஊராட்சி செயலர் திரு.சுப்பிரமணியன் என்பவரிடம் 17.06.2026ஆம் தேதியிட்ட மனுவை கொடுத்தேன். அவர், அதை பெற்று வைத்துக்கொண்டு, சார் ஏற்கனவே நான் உங்ககிட்ட தனியா ரூ.10,000/- கேட்டேன், நீங்க முதல்ல கட்டிட அனுமதி மற்றும் கட்டிட வரைபட அனுமதி கிடைக்க ஏற்பாடு செய்யுங்க, பிறகு பாப்போம்னு சொன்னீங்க, இப்ப கொண்டு வந்திருக்கீங்களா என்று கேட்டார். அதற்கு நான், இப்ப பணம் இல்ல சார், சும்மாதான் வந்திருக்கேன் சார் என்று சொன்னேன். அதற்கு அவர், நீங்க சொத்துவரி நிர்ணயம் செய்து, கேட்பு அறிவிப்பு வழங்க கேட்டு கொடுத்த மனுமீது நடவடிக்கை எடுத்து ஏற்பாடு செய்யணும்னா, நான் கேட்ட ரூ.10,000/- பணத்தை கொண்டுவந்து கொடுங்க, அப்பத்தான் ஏற்பாடு செய்வேன் என்று சொன்னார். அதற்கு நான், ஏற்கனவே கட்டிடத்துல நிறைய செலவு பண்ணிட்டேன், கொஞ்சம் கஷ்டமா இருக்கு, பார்த்து செய்யுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர், உங்ககிட்ட மட்டும் புதுசா கேக்கல, கட்டிட அனுமதி மற்றும் சொத்துவரி நிர்ணயம் செய்றது சம்மந்தமா பஞ்சாயத்துக்கு வர்ற எல்லார்கிட்டயும் கேக்குறதுதான், உங்ககிட்டதான் கம்மியா கேக்குறேன், நீங்கவேணா ரூ.5,000/- பணத்தையாவது கொண்டுவந்து கொடுங்க, இந்த ரூ.5,000/- பணத்தை கொண்டுவந்து கொடுத்தால்தான் உங்க மனைவி பெயரில் சொத்துவரி நிர்ணயம் செய்து, கேட்பு அறிவிப்பு வழங்க ஏற்பாடு செய்வேன் என்று கண்டிப்பாகவும் கராறாகவும் கூறிவிட்டார். ஊராட்சி செயலர் திரு.சுப்பிரமணியனுக்கு லஞ்சப்பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை, இருந்தாலும் அப்போது வேறு வழியில்லாமல் அவரிடம், சரிசார் நான் பணத்த ரெடி பண்ணிட்டு வந்து பார்க்குறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இந்த விபரங்களை வீட்டிற்கு வந்து எனது மனைவியிடம் சொல்லியபோது அவருக்கும் லஞ்சம் கொடுத்து சொத்துவரி நிர்ணயம் செய்து, கேட்பு அறிவிப்பு வாங்க விருப்பமில்லை. எனவே நியாயமாக செய்ய வேண்டிய அரசு வேலைக்கு நாம ஏன் லஞ்சப்பணம் கொடுக்கணும், விருதுநகர் லஞ்ச ஒழிப்பு துறையில புகார் பண்ணலாம் என்று முடிவு செய்தோம். எனக்கு சொந்த வேலை இருந்ததால் உடனே விருதுநகர் லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்திற்கு வரமுடியவில்லை. அதனால இன்று (21.06.2026) விருதுநகர் லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்திற்கு வந்து, எனது மனைவி திருமதி.நதியா பெயரிலுள்ள கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி மற்றும் கட்டிட வரைபட அனுமதி கிடைக்க ஏற்பாடு செய்ததற்கும், சொத்துவரி நிர்ணயம் செய்து, கேட்பு அறிவிப்பு வழங்க ஏற்பாடு செய்வதற்கும் ரூ.5,000/- லஞ்சப்பணம் கேட்ட செங்கமலப்பட்டி ஊராட்சி செயலர் திரு.சுப்பிரமணியன் என்பவர்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (sd) P.RAMESH 21.06.2026 Sir, Received the complaint on 21.06.2026 at 18.00 hrs, The genuineness of the complainant

was verified through sources and found to be genuine. The integrity and antecedent of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to SP/SR, DVAC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.05/2026 u/s. 7 of the P.C Act 1988 as amended in 2018 on 21.06.2026 at 20.30 hrs and took up for investigation. (Sd) (ஷே.ஜாஸ்மின் மும்தாஜ்) 21.06.2026 Inspr of Police/V&AC/VNR.

The original FIR along with original complaint is submitted to the court of the Principal District and Sessions Judge cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

21/06/26.
Inspr/V&AC/VNR.